I missed one of our leading men in Tinnanur from the Communion Service and was told that he had been bitten in a quarrel and was ill. I met the man himself afterwards near the Railway Station and asked him all about the fray. He said, "Two of my partners were quarrelling and I went in to separate them, when one of them who had drunk a little *water*, bit me in the side and I had got fever." I remarked that the water at Tinnanur must be very powerful, strong enough to go to a man's head. Such water ought not to be duty free. Of course it turned out that this is a polite way of saying that the man had drunk too much toddy. I regret to say that there is reason to fear that more and not less toddy is consumed from year to year. The present Collector of Chingleput told me he was sorry to say that revenue from that source is increasing rapidly. *I fear it is likely to increase so long as the authorities who are interested in the maintenance of revenue have the right to grant new licenses.* Surely human nature being what it is, we must expect them to push their business. Whatever be the case with the higher officials, the lower are not above the temptation to increase the toddy shops beyond the needs of the public.

14 APR 1910

THE TEMPERANCE HERALD.

மதுவிலக்குத் தூதன்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்—குறள்.

1910 ௵ ஏப்ரல் ௴.

The New Taxes.
புது வரிகள்.

இந்த வருஷமுதல் இந்தியா கவர்ன்மெண்டார் சில புது வரிகளை விதித்திருக்கிறார்கள். இவ்வாறு செய்யக் காரணம் வர வர கவர்ன்மெண்டுக்குச் செலவு அதிகரிப்பதும், சில வகையில் வருமானம் குறைவதுமே என்னப்படுகிறது. நமது நேயர்களில் பலருக்குத் தெரிந்திருக்கிற பிரகாரம் இதுவரையில் இந்தியா கவர்ன்மெண்டார் சீனாவுக்கு ஏற்றுமதி செய்து வந்த அபினியால் விசேஷ வருமானம் பெற்று வந்தார்கள். ஆனால் அபினி யருந்துவதிலிருக்கிற பயங்கரத் தீமையைப் பற்றி மதுவிலக்குச் சங்கத்தாரும், மிஷனெரிகள் போன்ற பரோபகாரிகளும் பலகாலமாய்க் கூக்குரலிட்டுவர, சீனா கவர்ன்மெண்டார் அதன் கேட்டையுணர்ந்து தங்கள் தேசத்தில் அபினியருந்துவதை அடியோடே நிறுத்திப்போடத் துணிவுகொண்டார்கள். கொண்டு, உள்நாட்டில் அநேகஜில்லாக்களில் அபினி விளைச்சலைத் தடுத்து பல இடங்களில் அபினி வியாபார கிடங்குகளைச்சாத்தி வியாபாரத்தை நிறுத்திவிட்டார்கள். இந்தியாவிலிருந்து வந்து ஏராளமாய் இறக்குமதியாகிற அபினியை மட்டுப்படுத்த வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டோடு ஒருஉடன்படிக்கை செய்துகொண்டார்கள். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா கவர்ன்மெண்டார் பிரதி வருஷமும் தங்கள் நாட்டில் அபினி விளைச்சலை மட்டாக்கி ஏற்றுமதியைக் குறைத்துக்கொண்டே வரவேண்டும். இதனால் இந்தியா கவர்ன்மெண்டுக்கு அபினியினால் வந்த வருமானத்துக்கு முட்டுண்டாகி வருஷந்தோறும் அரசிறையில் பெருந்தொகையான பணம் குறைந்துபோகக் காரணமேற்பட்டிருக்கிறது. இந்தக்குறைவை யீடுகட்டும்படிதான் இப்போது சில புதுவரிகளைப் போட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய வரிகளை விதித்தவிஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் மிகுந்த ஞானத்தையும் நிதானத்தையும் கையாடியிருப்பதைக் குறித்துச்சந்தோஷிக்கிறோம். பெரும்பாலான பொது ஜனங்களைப் பாதிக்கக்கூடிய விதமாய் வரியை விதிக்காமல், உயிர் பிழைத்தலுக்கு அவசியமல்லாத சில பொருட்களைப் பொறுக்கி அவைகளின்மேல் இதுவரையில் இருந்த வரியைக்கொஞ்சம் உயர்த்தியிருக்கிறார்கள். தேசத்துக்குச் சாபமாகவும், ஜன நன்மைக்குக்

14 APR 1910

கேடாகவுமிருக்கிற சாராயத்தின்மேலும், சுருட்டுச் சிகரற்றுகள் மேலும், வரிவிதித்திருக்கிறார்கள். அன்றி இந்நாட்டில்இறக்குமதியாகிறமண்ணெண்ணெய், கட்டிவெள்ளி, இவைகளின் வரியையும், தஸ்தாவேஜுக்குள்ள ஸ்டாம்பு வரியையும் நூற்றுக்கு 25 அல்லது 30 வீதம் உயர்த்தியிருக்கிறார்கள். மண்ணெண்ணெய் மீது வரியுயர்த்தப்பட்டது அவ்வளவு உசிதமாகக் காணப்படவில்லை. ஏனெனில் இக்காலத்தில் மத்தியதரத்து ஜனங்களும், ஏழைகளில் பெரும்பாலாரும் அதை யுபயோகிக்கிறார்கள். ஆகையால் அது பலரைப் பாதிக்கக்கூடும். ஆனால் மற்றச் சாமான்களின் மீது வரிவிதித்ததை மனப்பூர்வமாயொப்புகிறோம். கட்டி வெள்ளிமீது வரியுயர்த்தப்பட்டதால் ஏழைகள் வருத்தப்படமாட்டார்கள். வெள்ளி நகை செய்கிறவர்களுக்கு மாத்திரம் அது தடையாயிருக்கும். ஸ்டாம்பு வரியாலும் ஏழைகள் பாதிக்கப்படமுகாந்தரமில்லை. அப்படியே சாராயம், சுருட்டு, சிகரெற்று இவைகளுக்கு வரி போடப்பட்டதால் யாருக்கும் பாதகமில்லை. ஏனெனில் சாராயமாவது சுருட்டாவது மனிதன் தான் உயிர் பிழைக்கும்படி அருந்தக்கூடிய அவசியமான பொருளன்று. அவை ஜீவ வளர்ச்சிக்குப் பிரதிகூலமே யொழிய அனுகூலமானவையல்லன. அறியாமையாலோ துர்ப்பழக்கத்தாலோ பலர் அவைகளை யுட்கொள்ளப் பழகிக்கொண்டு பலவிதமான உபத்திரவங்களுக் குள்ளாகிறார்கள். சாராயம் சிகரற்றுபோன்ற லாகிரிவஸ்துக்கள் மனிதனுடைய ஆயுளைக் குறைத்து, அகால மரணத்துக் குள்ளாக்கும் கொடிய சத்துருக்களென அறியப்பட்டிருக்கின்றன. பணக்காரரும், பெருத்த வருமானமுள்ள உத்தியோகஸ்தரும் இவைகளை யருந்துவதைப் பார்த்து எத்தனையோ ஏழை ஜனங்களும், தக்க வருமான மற்றவர்களும் இத்தீயப் பழக்கத்துக்குள்ளாகி, தரித்திரம், அவமானம், நிர்வாணம், பசி, பட்டினி, பிணி, அகாலமரணம் இவைகளுக் குள்ளாகிறார்கள். இந்தியாவில் சாராயமும் சுருட்டும் சிகரெற்றும் நாளுக்கு நாள் பயங்கரமாய் விர்த்தியடைந்து வருகிறது. இதுகாறும் இவைகளை அருவருத்தொதுக்கிய மேன்குலத்தாரும் நாகரீகத்தின் அறிகுறியாய் இவைகளைக் கூசாமலுபயோகிக்கிறார்கள். சகல மார்க்கங்களும் இவைகளை நிஷேதித்திருந்தும், மார்க்க சட்டதிட்டங்களையும் இவ்விஷயத்தில் அலக்ஷியம் பண்ணி இந்துக்கள் நடந்து கொள்ளுகிறார்கள். சத்தியவேதக் காரராகிய கிறிஸ்தவர்களைப்பற்றி நாம் கூறவேண்டியதில்லை. அவர்களில் பெரும்பாலார், குடிக்கும் கிறிஸ்துமார்க்கத்துக்கும் வேற்றுமையேயில்லை யென்போது போலக் காட்டி மற்றவர் பார்வையில் கிறிஸ்துமார்க்கத்தை யிழிவுபடுத்துகிறார்கள். சுருட்டும் சிகரெற்றும் சிறுபையன்களுக்குள்ளும் அஞ்சத்தக்க விதமாய் நடமாடுகிறது. 1907-ம் வருஷம் 60 லக்ஷம் பவுன் நிறையுள்ள புகையிலைச்சரக்கு இந்தியாவில் இறக்குமதியானது. இந்தவிதமாய் இத்தேசத்தில் விர்த்தியானால் இன்னுஞ்சிலகாலத்தில் இந்தியா இவைகளினால் என்ன க்ஷீண நிலைமைக்குட்படுமோ என்றஞ்சவேண்டியதாயிருக்கிறது. இப்படி யிருக்கிறபடியால் இந்த இரண்டு விதப் பொருட்களின்மேலும் இந்தியா கவர்ன்மெண்டார் வரிவிதித்தது மிகவும் நியாயமாகும். இந்த வரியேற்பாட்டினால் பணக்காரருக்கு யாதும் நஷ்டமில்லை. அவர்கள் கொஞ்சம் அதிகத்தொகைபோட்டு இவைகளை வாங்கியுபயோகித்துக் கொள்ளுவார்கள். ஆனால் ஏழைகளாயுள்ளவா

OFFICE OF THE ... BOOKS, REGISTERED 14 APR 1910 MADRAS.

கள் இதற்கு முன் உபயோகித்தது போல இந்த அநாவசிய பொருட்களை உபயோகிக்க முடியாமற்போம். இந்தப்படி இந்தப்பயங்கர சத்துருக்களின் கையில் விழாதபடி சிலரையாவது தடுக்கக் கூடிய விதமாய் நமது கவர்ன்மெண்டார் இவ்வரியை யுயர்த்தினதற்காக நன்றி பாராட்டுகிறோம். அரசாங்கத்தார் பிரேரித்திருக்கிற இந்தவரிமசோதா சீக்கிரத்தில் சட்டமாக்கப்படும். வழக்கம்போல் வர்த்தகர்கள் இவ்வரிகளைப்பற்றிக் கூக்குரலிடுகிறார்கள். ஆயினும் சிற்சிலதிருத்தங்களோடு கவர்ன்மெண்டார் இவ்வரிகளை நிலைநிறுத்தி விடக்கூடும். என்றாலும் இவ்வித சொற்ப வரிகளினால் லாகிரி வஸ்துக்களால் இந்தியாவுக்கிருக்கிற நாசத்தை அகற்ற முடியுமா ?. கவர்ன்மெண்டார் தங்களுடைய வருமானத்தைக் கிஞ்சித்தும் கவனியாமல் இந்த வியாபாரத்தையே அடியோடு அகற்றினால் மட்டுந்தான் இந்தியா தேசம் இச்சத்துருவின் கையினின்று விடுபடும். அப்படிப்பட்டகாலம் சீக்கிரம் வரவேண்டுமென்றெதிர் நோக்குகிறோம்.

The Protection of Children.
குழந்தைகளைச் சம்ரட்சித்தல்.

இக்காலத்தில் அநேகம் குழந்தைகள் நாதனற்றுக் கைவிடப்பட்டுப் போகின்றனவென்றும், அவைகள் சம்ரக்ஷிப்பாரின்றி வறுமையால் வருந்தித்தவிக்கின்றனவென்றும், சிலபிள்ளைகள் பெற்றோர்களாலேயே துன்மார்க்க வழியில் ஜீவனம் பண்ண ஏவப்பட்டுக் கெட்டுப்போகின்றன வென்றும் கண்டு, இதைத்தடுக்கும்படி சில பரோபகாரிகள்ஒன்று கூடி இரண்டு வருஷங்களுக்கு முன்னே இச்சென்னையில் ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இவ்வித சங்கம் சென்னைக்குப் புதிதாயினும்,இந்தியாவின் மற்றப் பாகங்களில் புதிதல்ல. கல்கத்தாவில் இவ்வித சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டு வெகுநாளாய் நல்ல வேலை செய்து வருகிறது. சென்னையில் நாள்பட்டு இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதென்றே சொல்லவேண்டும். அப்படிக்கிருந்தாலும் இந்த இரண்டு வருஷத்தில் இச்சங்கத்தார் திருப்திகரமாய் வேலைசெய்திருக்கிறார்கள். தங்களுக்கு முன்னிருக்கிற வேலையின் உத்தரவாதத்தை நன் குணர்ந்திருக்கிறார்கள். மார்ச்சுமாத ஆரம்பத்தில் சென்னை கவர்னர் தோட்டத்திலுள்ள விருந்து மண்டபத்தில் இச்சங்கத்தாரின் இரண்டாம் வருஷாந்தரக்கூட்டம் கூடிற்று. அப்போது கவர்னரவர்களும், சென்னை லார்ட் பிஷப்பும், ஜஸ்டிஸ் அப்துல் ரஹீமும், ஜஸ்டிஸ் சங்கரன் நாயரும், மிஸ்ஸெஸ் ஹாச்செல் என்கிற ஆங்கிலமாதும் இச்சங்க சம்பந்தமாய்ச்செய்திருக்கிற வேலைகளையும், செய்யவேண்டிய வேலைகளையும்பற்றிப் பேசினார்கள். சங்கத்தின் அறிக்கைப் பத்திரிகைப்படிக்கு இப்போது 43 பிள்ளைகள்தான் சம்ரக்ஷணையி லிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தப்பிள்ளைகள் முன்னிருந்த ஸ்திதியில் இராமல் நல்ல வழிகளில் வளர்ந்து வருவதாகச்சொல்லப்படுகிறது. ஆனால் சில பிள்ளைகளைச் சேர்த்து நல்லவழியில் வளர்த்து வருவது பெரிய காரியமல்லவென்றும், பெற்றோர் பிள்ளைகளைத் துன்மார்க்க வழிகளில் புகுத்திச் சம்பாத்தியஞ்செய்யும் கோரமான வழக்கத்தைத் தடுப்பதும், நாதனற்றவர்களாய் இருப்பிடமாவது அன்னவஸ்திரங்களாவதின்றி திரிந்து திருட்டு முதலிய குற்றங்கள் செய்து பிள்ளைகள் கெட்டுப்போகாதபடி பார்ப்பதுமே பெரியகாரியமென்றும் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் சொன்னார். இக்காலத்தில் நாகரீகம் பெருகின பட்டணங்களில் தொழிற்சாலைகளும், மற்றும் பிழைப்புக்குரிய வழிகளும் அதிகரிக்க, நாட்டுப்புறங்களினின்று அநேக ஜனங்கள் பட்டணங்களையடுத்து ஜீவிக்கும்பொருட்டு வருகிறார்கள். இப்படி வருகிற எல்லாருக்குமே வேலை கிடைத்துப் பிழைப்புண்டாயிருக்கிறதென்று சொல்ல முடியாது. அநேகம்பேர் வேலை கிடைக்காமல் பிழைப்புக்கு மார்க்கமின்றித் திண்டாடுகிறார்கள்.அப்படிப்பட்டவர்களும், அவர்கள்பிள்ளைகளும் என்ன செய்யக்கூடும்? பசியையும் வறுமையையும் தாங்கமாட்டாமல் திருட்டுமுதலிய பலவித தீயவழிகளில் புகுந்து ஜீவனஞ்செய்ய முயலுகிறார்கள். இதனால் மாசற்ற குழந்தைகள் சிறுவமுதலே துன்மார்க்க

OFFICE OF THE ... 14 APR 1910 ... MADRAS

வழிகளில் பழகிப்போக ஏதுவாகிறது. இது தவிர பெரியபட்டணங்களில் விபச்சாரம் தீய நடத்தை முதலிய துர்விஷயங்களுக்கு அதிக இடமிருப்பதால் அநேக தூர்த்தர் பிள்ளைகளைப்பெற்றுக் கூசாமல் வீதிகளில் எறிந்துவிடுகிறார்கள். அநேகர் தங்கள் பிள்ளைகளைத் துன்மார்க்க வழியில் விட்டு அதனால் ஊதியம் பெறுகிறார்கள். நமது நாட்டில் மட்டுமன்று; தற்காலத்தில் நாகரீகத்தில் முன்னேறிவரும் எல்லா நாடுகளிலுமுள்ள பெரியபட்டணங்களிலெல்லாம் இவ்வித செயல்கள் பெருகிவருகின்றன. ஆகவே அங்கங்கும் பொது ஜன நன்மையை விரும்பும் பரோபகாரிகள் இது விஷயத்தில் மிகுந்த கவலையெடுத்துக் கொண்டு, கைவிடப்பட்டும் தீயவழியில் புகுந்து கெட்டும் போகிற பிள்ளைகளைச்சேர்த்துச்சம்ரக்ஷித்து நல்லவழியில் வளர்க்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். கல்கத்தாவில் வெகுநாளைக்கு முந்தியே இவ்வித சங்கமொன்றுஏற்பட்டுத்தற்போது 900 பிள்ளைகள் அச்சங்கத்தார் ஆதரவில் பாதுகாக்கப்பட்டுவருகிறார்கள். சென்னையிலும் இரண்டு வருஷங்களுக்கு முன்னே சில மிஷனெரிகளும் சில இந்து பிரமுகர்களும் சேர்ந்து இதை ஸ்தாபித்தார்கள். சென்னை கவர்னர், சென்னை லார்ட் பிஷப் இவர்கள் போன்ற மேதாவிகள் இதில் விசேஷித்த அக்கரை காட்டி வருகிறார்கள். இந்தச்சங்கத்தாருக்கு இப்போது ஒரு கட்டிடம் சொந்தமாயிருக்கவில்லை. கவர்ன்மெண்டார் அவ்விதம் ஒரு கட்டிடம் கொடுத்து உதவக்கூடுமா என்று கேட்டதற்கு, அவர்கள் அப்படிச் செய்ய இப்போது சௌகரியமில்லையென்று சொல்லிவிட்டது விசனமானகாரியம். இந்த நன் முயற்சிக்குப் பெருத்த பொருள் சகாயம் வேண்டியதாயிருக்கிறது. காலம் சென்று போன டாக்டர் வரதப்பநாயுடு 30,000 ரூபாய் நன்கொடை செய்தார். அவரைப் போலவே சில தனிகர்கள் ஏற்படுவார்களானால் இச்சங்கம் பெருத்த நன்மையைச் செய்யக் கூடும். இந்தப் பிரயோஜனகரமான சங்கத்துக்குப் போதுமான பொதுஜன ஆதரவு ஏற்பட வேண்டுமென்று இருதயப் பூர்வமாய் விரும்புகிறோம்.

The Evil of Tobacco Habit.

புகையிலையின் தீமை.

(முன் தொடர்ச்சி)

(3) புகையிலை பல நோய்களுக்குக் காரணமாயிருக்கிறது:—பலக்ஷயம், குடல் பலஹீனம், ஈரல்நோய், குலைநோய், பார்வையில்லாமை, கீல்வாதம், பலவித புண்கள் ஆகிய இவை முதலான வியாதிகள் புகையிலையருந்துவதால் ஜெனிக்கின்றன வென்று வைத்திய சாஸ்திரப் பண்டிதர்கள் கூறுகிறார்கள். பிரசித்திப் பெற்ற இங்கிலீஷ்வைத்தியசாஸ்திரியும்பண்டிதசிரோன்மணியுமாகிய ரிச்சார்ட்ஸன் பண்டிதர் சொல்லுவதென்னவெனில், "புகையிலை பாலியருக்கு மிகுந்த தீமையை உண்டுபண்ணுகிறது. புகைகுடித்தல் பிள்ளைகள் வளர்ச்சியைத்தடுத்து, பருவத்திற்கு முந்தி கிழத்தனத்தை யுண்டாக்கி, நரம்பு வலிவைக்குறைத்துச் சரீர பலஹீனத்தை யுண்டாக்கிவிடுகிறது" என்கிறார். நியூயார்க் பட்டணத்தில் இதைப் பரிசோதிக்க ஒரு முயற்சி கையாடப்பட்டது. சுக ஸ்திதியிலிருந்த 38 பிள்ளைகளைப் பொறுக்கியெடுத்து, பிள்ளைகளுடைய வயதுக்குத் தகுந்தபடி 2 மாதமுதல் 2 வருஷம் வரையில் புகையிலையை யுபயோகிக்கச் செய்தார்கள். அதன் பலனைக் கண்டு பிடித்ததென்னவென்றால் 27 பேருக்குச் சரீரசுகமே கெட்டுப்போய் வளர்ச்சிக்கு ஹானியுண்டானது. 32 பேருக்கு குலைதுடிப்பில் ஒழுங்கின்மையுண்டாயிற்று. 12 பேருக்கு மூக்கில் இரத்தம் வடிந்துகொண்டிருக்கலாயிற்று. புகையிலைப்பழக்கத்தை அவர்களுக்கு நிறுத்தின ஆறுமாத காலத்துள் அவர்களில் அரைவாசிப் பேருக்கு அத் துர்க்குணங்களெல்லாம் நீங்கிப்போய் விட்டது. மற்றவர்கள் ஒரு வருஷதிட்டத்துள் முந்தின சுகஸ்திதியையடைந்தார்கள்.

(4) புகையிலை தேக பலத்தைக் குறைக்கிறது:—யேல் சர்வகலா சாலையில் சிலம்பவித்தைக்குத் தலைவராகிய டாக்டர் சேவர் என்கிற பண்டிதர் எட்டு வருஷம் பரிசோதனை செய்து என்னவித அபிப்பிராயம் வெளியிடுகிறாரென்றால், புகையிலை யுபயோகிப்பவர்களை விட அதை யுபயோகியாதிருப்பவர்கள் நிறையில் நூற்றுக்குப்

பத்து வீதம் அதிகரித்திருக்கிறார்களென்றும், வளர்ச்சியில் நூற்றுக்கு 24 வீதமும், மார்பு அகலத்தில் நூற்றுக்கு 22 வீதமும், ஈரலின் கிரியை பலத்தில் நூற்றுக்கு 77 வீதமும் அதிகரித் திருக்கிறார்களென்றுந் தெரிவிக்கிறார். அவர் சொல்லுவது :— "புகையிலை யுபயோகிக்கும் பையன்கள் அதைத் தொடாத பையன்களைவிட தேக தைரியத்திலும், புத்திச் சாதுரியத்திலும் குறைந்திருக்கிறார்கள். மிகவும் பேர் பெற்ற சிலம்ப வித்தைக்காரர் புகைகுடிப்பதில்லை. சமுத்திரத்தில் தண்டு வலிக்கப்பழகுவோரில் ஒருவராவது புகை குடிப்பது கிடையாது. தண்டு வலிப்பதில் உலகமெங்கும் பிரசித்திப் பெற்ற மிஸ்டர் ஹான்லன் என்பவர், திடகாத்திர சரீரம் வேண்டுமாயின் மதுவையும் புகையிலையையும் விலக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். சிலம்ப வித்தைக் காரருக்குப் புகையிலை மிகவும் பாதகமானது." 1904-ம் வருஷத்தில் அடால்ப் டோப்பர்வின் என்பவர் குறி பிசகாமல் சுடுவதில் வல்லவனெனப் பெயர் பெற்றிருந்தார். பறந்துபோகிற பக்ஷிகளை ஆயிரத்துக்குமேல் தொடர்ச்சியாய் குறிதவறாது சுட்டார். ஆகாயத்தில் தூக்கியெறியப்பட்ட கட்டைகள்மேல் 5000 வெடி சுட்டதில் 100 மட்டும் தவறிப்போனது. இவ்வித பலசாலிஒருநாளும் புகையிலையைக் கையால் தொட்டதில்லை. இந்தியாமுழுமையிலும் சீக்கியர் என்கிற ஜாதியாரே யுத்தப்பிரியரும் பல சாலிகளும். மற்றெல்லா ஜாதியாரைப்பார்க்கிலும் தேகக்கட்டுடையவர்கள். இவர்கள் புகையிலையருந்துகிறதே கிடையாது. இவ்விதமாய்ச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் புகையிலையருந்துகிற தூர்ப்பழக்கம் எண்ணிறந்த கேட்டுக்குக் காரணமாயிருக்கிறதெனக்காணலாம். புகையிலையை வாயிலடக்குவதானாலுஞ் சரி, பொடிசெய்துமூக்கிற்போடுவதானாலுஞ்சரி சுருட்டிப் புகைத்து அப்புகையை உட்கொள்ளுவதானாலுஞ் சரி அது மேற்சொன்ன அநந்த கேடுகளுக்கு ஆஸ்பதமாயிருக்கிறது. புகையிலையருந்துதல் அப்பிரயோஜன தூர்ப்பழக்கம், வீண் செலவுள்ள தூர்ப்பழக்கம், மற்றவர்களுக்கு இடையூறும் வெறுப்பு முண்டாக்கும தூர்ப்பழக்கம், பரிசுத்தத்துக்கு விருத்தமான அவலக்ஷண தூர்ப்பழக்கம், சரீரசுகத்தையழிக்குந் தூர்ப்பழக்கம், புத்திக்கூர்மையை மழுக்குந் தூர்ப்பழக்கம், திடகாத்திர தேகமும் நல்ல சுகமில்லாத சந்ததியை யுண்டாக்குந் தூர்ப்பழக்கம். புகையிலை யுபயோகிக்கும் தாய் தந்தையரிடமிருந்து அதிலுள்ள விஷச் சத்து அவர் பிள்ளைகளுக்கும் போகிறதென்று சாஸ்திர யுக்தமாய் ரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இத்தூர் வழக்கத்தை ஒவ்வொருவரும் விட்டொழித்தல் அவசியம்.

News and Notes.

சமாசாரக் குறிப்புகள்.

The Human Body :—மானிடதேகத்தை இரசாயன சாஸ்திர முறையாய்ப் பகுத்துப் பார்ப்போமானால் அதில் அநேக அதிசயங்களைக் காணக்கூடும். 150 பவுன் நிறையுள்ள சுகமுள்ள ஒரு மனிதன் சரீரம் இரசாயன மேரையாய் 1000 கோழி முட்டைகளுக்குச் சமம். அந்தச் சரீரத்தில், 38 குவார்ட் ஜலமிருக்கிறது ; இந்த ஜலமே அரைவாசி கனமுள்ளதாயிருக்கிறது ; 60 கட்டி சர்க்கரையிருக்கிறது ; 20 கரண்டி உப்பிருக்கிறது ; 7 பெரிய ஆணிகள் செய்யக்கூடியஇரும்பு இருக்கிறது;இரண்டு பவுன் சுண்ணாம்பிருக்கிறது ; பிராண வாயு, ஜலவாயு, கரியமிலவாயு இவைகள் 3500 கன அடி கொண்டதாயிருக்கிறது ; 20 பவுன் கரியிருக்கிறது; இதைக்கொண்டு 10,000 காகிதப் பென்ஸல் செய்யலாம் ; 8 லக்ஷம் தீக்குச்சிகளுக்குப் போதுமான கிபாக்கினியிருக்கிறது ; இவைதவிர கந்தகம், பிசின் முதலிய இன்னும் பல வஸ்துக்களுமிருக்கின்றன. எவ்வளவு ஆச்சரியமாய்க் கடவுள் இச்சரீரத்தையுண்டு பண்ணியிருக்கிறார் !

Opium Restriction in China :—சீனாவிலுள்ள மிஷனெரிமார் தெரிவிக்கிற பிரகாரம், ஷெக்குவான் மாகாணத்தில் பரிசீலனை செய்ததில் அந்த மாகாண முழுமையிலும் அபினி விளைச்சல் நிறுத்தப்பட்டுப் போயிற்று. வட சீனதூதிகை என்கிற பத்திரிகை இதைப்பற்றி விசாரணை செய்து இது உண்மை தான் என்று சாக்ஷிபகருகிறது. இந்த மாகாணமே இதுவரையில் அதிக விளைச்சலுள்ளதாயிருந்தது. இதில் நிறுத்தப்பட்டுப்போனது முழுதேசத்திலுமே கூடிய சீக்கிரத்தில் அபினி விளைச்சல் இல்லாமல் போகுமென்பதற்கு அறிகுறியாகுமென்று அப்பத்திரிகை கூறுகிறது.

The Navy Estimates :—நடை முதல் வருஷத்துக்கு பிரிட்டிஷ்கப்பற்படை செலவுக்கு 40,603,700 பவுன் மதிப்பு திட்டம் போட்டிருக்கிறது. இதில் முந்தின திட்டத்துக்கு 5,561,000 பவுன் அதிகம். இந்தத் தொகையில் மிகுதியான பாகம் புதிய கப்பல்களுக்கும் யுத்தாயுதங்களுக்கும் செலவிடப்படும். புதியதாய்க் கட்டப்படும் கப்பல்களின் மொத்த செலவு 13,279,830 பவுன். இதில் 11,850,790 பவுன் ஏற்கனவே கட்டப்பட்டுவரும் கப்பற்களுக்கும், மிச்சம் புதிய கப்பல்களுக்கும் செலவிடப்படும்.

Items about the New Parliament :- புதிய மந்திராலோசனை சபையில் மெம்பர்களாயிருக்கிறவர்களில் ப்ரீசர்ச்சைச் சேர்ந்தவர் 127. காங்கிரிகேஷனல் சபையைச் சேர்ந்தவர் 52. பாப்டிஸ்ட் சபையார் 26. வெல்ஷ் கால்வனிஸ்டிக் மெத்தடிஸ்ட் சபையார் 9. ப்ரிமிடிவ் மெத்தடிஸ்ட் சபையார் 8. ஐக்கிய மெத்தடிஸ்ட் சபையார் 3. சிநேகிதர்கள் என்கிற வகுப்பார் 5. ஒருத்துவ மார்க்கத்தார் 7. பிரஸ்பிடீரியன்ஸ் 2. போதக பட்டம் பெற்றவர்கள் 7 பேர். இவர்களெல்லாரும் லிபரல் கக்ஷியார். இவர்களில் ஒருவர் மாத்திரம் இன்னும் சபையில் போதகராயிருக்கிறார். மற்றவர் சபை வேலையை விட்டுவிட்டார்கள்.

Jews Emigrating to Palastine :—துருக்கியில் புதிய இராஜாங்கம் ஏற்பட்டது முதல் உலகமுழுமையிலுமிருந்து யூதர்கள் பலஸ்தீனுவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அங்கே யூதர்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. எருசலேம் குடி ஜனத்தொகை ஒரு லக்ஷத்தில் ஐந்தில்நாலுபாகம் யூதர் எஸ்ட்ரேலியன் என்கிற பூமிமுழுவதும் யூதர்களால் வாங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் குடியேறியிருக்கிற பாகம் தான் முதல் பெயர்சேபாமட்டும், அதற்குத் தெற்கில் எகிப்து மட்டுஞ் செல்லுகிறது. பெர்ஷியாவிலிருந்தும் அநேகர் தப்பிப்போய் பரிசுத்த நாட்டில் குடியேறுகிறார்கள். ஒடெஸ்ஸாவிலிருந்து புறப்படுகிற கப்பல்களிலெல்லாம் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் போகிறார்கள். மாஜி சுல்தான் அப்துல் ஹமீதுக்குச் சொந்தமாயிருந்த யோர்தான் பள்ளத்தாக்கை யூதர்கள் வாங்கப் பிரயத்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அநேக இடங்கள் வாங்கப்பட்டுவருகின்றன.

More Buddhist Relics:—சிலகாலத்து முந்தி வட இந்தியாவில் புத்தனுடைய அஸ்திகள் என்று நினைக்கப்பட்ட பரிசுத்த சின்னம் கண்டு பிடிக்கப்பட்டதல்லவா? அது இதுவரையில் இந்தியா கவர்ன்மெண்டாரிடமிருந்து சில தினங்களுக்கு முன்னர் தான் பர்மாவிலிருந்து வந்த புத்தமத பிரதான குருக்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. இப்போது சிந்துவில் மிர்பூர் காஸ் என்னுமிடத்தில் அதேபோதிரி சின்னம் கண்டு பிடிக்கப்பட்டதாயறிவிக்கப்படுகிறது. சில பூர்வீகமடங்களைச் சோதிக்கையில் ஒரு புத்த விக்கிரகத்தின் கீழ் ஒரு கண்ணாடிப் புட்டி கண்டெடுக்கப்பட்டது. அதற்குள் பொன் தகடால் மூடப்பட்ட வெள்ளி பறணியொன்றிருந்தது. அதற்குள்ளே சிறிய பொற் சிமிழிருந்தது. அந்தச் சிமிழில் ஒரு சிறிய பொற்பாத்திரத்தில் கொஞ்சம் சாம்பல் போன்ற தூளிதமும் சில கற்பொடிகளுமிருந்தது. இந்தத் தூளிதத்தை பூத கண்ணாடிகொண்டு பார்த்ததில் சுட்டெரிக்கப்பட்ட மனுஷ தேகத்தின் சாம்பலென்று தீர்மானிக்கப்பட்டது இது தான் புத்தனுடைய சரியான அஸ்தி சாம்பலாயிருக்குமென இப்போது கருதப்படுகிறது. இது தற்கால பம்பாய் பூர்வீக சின்ன பரிசோதனை தலைவர் மிஸ்டர் கௌசென்ஸ் வசமிருக்கிறது.

The White-ribbon Missionary of W. C. T. U :—கிறிஸ்தவ ஸ்திரீகள் மதுவிலக்கு ஐக்கிய சங்கத்து வெள்ளை நாடா மிஷனெரி என்று பெயர் பெற்ற மிஸ்ஸெஸ் காதரைன் லென்டி ஸ்டீவன்ஸன் என்கிற மாது சென்ற மாதத்தில் பம்பாய் வந்து சேர்ந்து பல பிரசங்கங்கள் செய்தார். முதல் கூட்டத்தில் ஸ்திரீகள் சங்கத்து கொள்கைகளைப்பற்றிப் பேசினார். அதில் ஸ்திரீகள் தங்கள் வீடுகளில் பிள்ளைகளைப் பரிபாலிக்கிற மட்டில் நின்றுவிடாமல் அதைத்தாண்டி வீதிகள் மட்டும் அதற்கும் அப்பால் தம்தேசமட்டும், அப்புறம் உலகமட்டும் போகவேண்டுமென்றும், மது பானத்தினாலுண்டாகிற கேடுபாடுகளை தீர்க்கமாய்க் கவனிக்க வேண்டுமென்

றும், மதுபானத்தோடும், லைசென்ஸ் பெற்ற மதுபான.கடைகளோடுஞ் செய்யும் போரை இடையறாது நடத்த வேண்டுமென்றும், தேசத்திலே மதுபானமே அற்றுப் போகிறமட்டும் பாடுபடவேண்டுமென்றும் வற்புறுத்தினார். இன்னும் சில கூட்டங்களில் மதுபானத்திலிருக்கிற தீமையைப்பற்றி சாஸ்திர முறைப்பா யெடுத்துக் காட்டினார். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் கடந்த 25 வருஷகாலமாய் மதுபானக் கேட்டைப்பற்றிப் பள்ளிக்கூடங்களில் பாடஞ் சொல்லி வைக்கப்பட்டு வருவதையும், அநேக இடங்களில் மதுபானமேயில்லாதொழிந்ததையும் பற்றி சொன்னார். கடைசியில் இந்தியாவில் பாடசாலைகளில் மதுபான தீமையைப் பற்றிப் பாடங்கள் சொல்லிவைக்கப்பட வேண்டுமென வற்புறுத்தினார்.

A Panchama's Firmness:—சென்னை சர்ச் ரெக்கார்ட் ஒரு பஞ்சமனின் வைராக்கியத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. அவன் பகிரங்கமாகவும் கிராம அதிகாரிக்கு முன்னிலையிலும் விக்கிரகத்தைக் கும்பிடமாட்டேனென்று மறுத்து எல்லாருக்கும் எதிரில் தைரியமாய் முழங்கால் படியிட்டுத் தனக்காகவும், மற்றவர்களுக்காகவும் கடவுளை நோக்கி ஜெபம் பண்ணினான். இச்செய்கை அநேகர் அவனை மதிக்கும்படி செய்தது.

Baby and Whisky:—கொழும்பில் ஒரு ஷாப்பில் உத்தியோகஞ் செய்கிற ஒருவரின் 2 வயது குழந்தை, இராத்திரியில் தூங்கிக்கொண்டிருக்கையில் தாகமெடுக்க, எழுந்துபோய் மாடத்திலிருந்த விஸ்கிபுட்டியிலிருந்துகொஞ்சம்சாராயத்தைக் குடித்து விட்டது. அதில் 2 கிளாஸ் சாராயந் தானிருந்ததாம். அக்குழந்தை சிலமணி நரேத்துக் கெல்லாம் மரித்துப் போனது. சாராயம் விஷ மென்கிறதற்கு இதை விட திருஷ்டாந்தம்வேண்டுமா? குழந்தையைக் கொன்ற சாராயம் தம்மையுடனே கொல்லாததால் அரேகர் அதை விஷமாக நினைக்கிறதில்லை. இது மதியீனமே!

The Late Dr. Samuel Sathianathan:—மார்ச்சு-மீ 18உ சென்னை சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள சத்தியநாதன் ஞாபக மண்டபத்தில், காலஞ்சென்றடாக்டர் சாமுவேல் சத்தியநாதன் அவர்களின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. அவருடைய நண்பர்களில் பலர் அவருடைய ஞாபகமிருக்கும்படி இந்த உருவப்படத்தைச் செய்வித்து அம்மண்டபத்தில் தூக்கி வைத்தார்கள். அச்சமயத்தில் ஜஸ்டிஸ் சர் பென்ஸன் அக்கிராசனாதிபதியாயிருந்து படத்தைத் திறந்தார். திறக்கும்பொழுது காலஞ்சென்ற மிஸ்டர் சத்தியநாதனைப் பற்றி மேன்மையாய்ப் பேசினார். அநேக கனவான்கள் அச்சமயத்தில் விஜயஞ் செய்திருந்தார்கள்.

Madras Archdeaconary:—மார்ச்சு-மீ 16 உ மாலை சென்னை அத்தியக்ஷாலயத்தில் வெனரபில் லையனல் எட்கர் சாக்ஸ் ஆர்ச்டீக்கனாக உயர்த்தப்பட்டார். சென்னை லார்ட் பிஷப்பும் இன்னும் பல குருக்களும் இந்தச் சடங்கை நடத்தினார்கள். இரண்டாம் பாடம் வாசிக்கப்பட்ட பிறகு பிஷப் சாப்ளன் பிஷப்புடைய அதிகாரப் பத்திரம் வாசித்தார். அதில் சங்கை சாக்ஸ் ஐயர் ஆர்ச்டீக்கனாக உயர்த்தப்பட்டது சொல்லப்பட்டிருந்தது. பிறகு ஐயர்மார் புடைசூழ வெஸ்ட்ரிக்குப் போய் ஐயரை அழைத்துவந்து ஆர்ச்டீக்கன் பீடத்தண்டை நிறுத்தினார்கள். இதற்குப் பின் அவருக்கு அதிகாரம் ஒப்புவிக்கப்பட்டது. அவரும் வாக்குதத்தம் கொடுத்தார். இந்த ஆராதனைக்குப் பலர் வந்திருந்தார்கள்.

Riot in Chamber:—மார்ச்சு மீ 21 உ ஹங்கேரியன் மந்திராலோசனை சபையில் சபையைக்கலைத்து விடுவதைப்பற்றி ஒரு பெருங் குழப்பமுண்டானது. கக்ஷிப்பிரதி கக்ஷியார் வார்த்தைகளிலே எல்லை மீறிக் கடைசியில் கைகலந்து கொண்டார்கள். சிலர் புஸ்தகங்களையும், மைக்கூடுகளையும் எடுத்துக் கொண்டு எதிர்க் கக்ஷியாரைத் தாக்கினார்கள். மைக்கூடு பிரதம மந்திரி முகத்தில் தாக்கிப் படுகாயப்படுத்தினது. வைத்தியர்கள் சபையில்தானே வந்து சிகிச்சை செய்வது அவசியமாயிற்று. இந்தக் கோலத்தில் மந்திராலோசனை சபை கலைந்தது.

The Late K.C. Banarji:—மார்ச்சு மீ 17வ கல்கத்தா யூனிவர்ஸிற்றி இன்ஸ்டிடியூற்றில் ஆனரபில் மிஸடர் S.P. சின்னா காலஞ் சென்ற காளிச்சரணபானர்ஜியவர்களின் உருவப்படமொன்று திறந்து வைத்தார். அந்தச்சமயத்தில் அவர் கலாசாலை மாணவர்களுக்கு ஒரு சிறந்த உபந்நியாசஞ் செய்தார். அவ்வுபந் நியாசத்தில், தற்காலம் மாணவரிற் சிலர் அகிருத்தியங்களை நடத்தத்துணிந்திருந்தாலும், எப்போதுமே அவர்கள் அப்படியே மாறிப்போவர்களென்று தாம் நினைக்கவில்லையென்றும், அவர்கள் சீக்கிரத்திலே யோக்கிய நிலைமையை அடைவார்களென்றும், இப்போதே அடைந்து கொண்டுவருகிறார்களென்றும், மாணவர் மீது விழுந்திருக்கிற இந்தப் பெரிய அபவாதத்தை அவர் நீக்க முயலவேண்டுமென்றும் எடுத்துப்பேசினார்.

Railway Accident:—சிக்காகோ நகரிலிருந்து வந்திருக்குஞ் செய்தியால் அவ்விடத்து ராக்ஐலண்டு ரெயில் பாதையில் வண்டித் தொடர் வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கையில், வண்டிகள் தண்டவாளத்தை விட்டுப்புரண்டு விழுந்து பல நொறுங்கிப் போனதாக அறியவருகிறோம். 45 பேர் உயிர்த்துறந்தனர். 31 பேர் படுகாயமடைந்தனர்.

Tamil Papers confiscated:—புதுச்சேரியில் அச்சிடப்பட்டுவந்த "இந்தியா", "சூரியோதயம்" என்கிற தமிழ்ப்பத்திரிகைகள் புது அச்சுச்சட்டத்தின் கீழ் எட்வர்ட் சக்கிரவர்த்திக்குப்பறி முதலாய் விட்டதாக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் கெஜட்டில் விளம்பரஞ் செய்திருக்கிறார்.

Mr. J. P. Cotelingam and Bellary Muncipality:—பல்லாரிவார்ட்லா ஹைஸ்கூல் தலைவர் மிஸ்டர் J. P. கோடிலிங்கம் பல்லாரி முனிசிபல் கவுன்ஸிலர்களில் ஒருவராய் நியமிக்கப் பட்டிருக்கிறார். முந்தி அவர் வரி செலுத்துவோரால் தெரிந்தெடுக்கப்பட்டு அந்தக் கவுன்ஸிலில் ஸ்தானம் வகித்த துண்டென்றாலும், இப்போது கவர்ன்மெண்டாராலேயே நியமிக்கப் பட்டிருக்கிறார். நமது சகோதரர் ஏற்கனவே பல்லாரி ஜில்லாபோர்டு மெம்பராயும், தாலுகா போர்டு மெம்பராயுமிருந்து வருகிறபடியால் அவரை நமது கவர்ன்மெண்டார் முனிசிபல் கவுன்ஸிலராகவும் தெரிந்து கொண்டது மிகவும் தகுதியுடையதேயாகும்.

Temperance Notes.

மதுவிலக்குக் குறிப்புகள்.

பிரிட்டிஷ் இராணுவத்தில் முழுவதுமே மதுபானமுட்கொள்ளாதபேர்வீரர்52,000 பேரிருக்கிறார்கள்.

சாப்பாட்டுக்கு முந்தி அவித்த கோவிஸ் கீரையைச் சாப்பிட்டுவந்தால் குடியின்மேல் வெறுப்புண்டாய் விடுமென்று சொல்லப்படுகிறது.

1905-ல் கிரேட் பிரிட்டனில் 10,000 பேருக்கு 34 சாராயக் கடைகளிருந்தன 1908-ல் 10,000 பேருக்கு 27 சாராயுக் கடைகள் மட்டுமிருந்தன.

வெஸ்ட் மின்ஸ்டர் அப்பேயில் டர்ராம் பிஷப் மதுவிலக்கு விஷயமாய்ப் பேசினபோது, சகல கிறிஸ்தவ சபைகளுக்கும் கொடுக்கப் பட்ட தொகை 30,00,000 பவுண் மாத்திரமிருக்க, தேசத்தில் சாராயத்துக்காக செலவிடப்பட்ட தொகை 150,000,000 பவுண் என்று சொன்னார்.

பிரிட்டிஷ் வரவுசெலவு திட்டக்கணக்கு ஏற்பட்டதின் பிறகு ஸ்காட்லாந்தில் குடி கொஞ்சம் மட்டுப்பட்டிருககிறதாகத் தெரிவிக்கப்படுகிறது. சென்ற மூன்று மாதத்தில் எடின்பரோவில் மறியல் செய்யப்பட்ட குடிகாரர் தொகை 909 லிருந்து 553 ஆகக் குறைந்திருக்கிறது. ஒழுங்குதவறாய் நடந்தவர்களின்தொகை 1334லிருந்து 1018ஆகக் குறைந்திருக்கிறது.

ஆர்மாக் என்னு மிடத்தில் ரெவரெண்ட் தாமஸ் பாட்டர்ஸன் என்பவர் நூதன வகையாய் ஒரு மதுவிலக்கு முயற்சியையுண்டாக்கி நடத்திவருகிறார். இந்த முயற்சி சங்கத்தில் சேர்ந்து கையொப்பஞ் செய்கிற ஒவ்வொரு அங்கமும் ஒரு சிநேகிதனைக் குடியாதபடி செய்யவேண்டும். இந்த முயற்சியால் திருந்தக் கூடாத அநேக குடிக்காரர் திருந்தியிருப்பதாய்ச் சொல்லப் படுகிறது.

நசரையார் சதகம்:—ஆண்டவருடைய அருண் மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப்பத்திரிகையின் தமிழ் எடிட்டரிடங் கிடைக்கும். ஒரு அணா லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.